தனிச்சுற்றுக்கு மட்டும்... விற்பனைக்கல்ல...

2026 March 16-31

அழகிய தமிழ் ஓசை

இன்று என்றும் நன்று

ஈ இதழ்

இன்று

சிரிப்பு



சிறப்பிதழ்

சிரிப்பு

மினி கதை

உங்களுக்கு எப்படி அல்சர் வந்தது? என்று எதிர்வீட்டு மாமியிடம் கேட்டேன்.

அதுவா, அம்பி... போனவாரம் ஒரு படம் பார்த்தேன். சிரித்து, சிரித்து வயிறு புண்ணாயிடுத்து. என்றார் மாமி.



மலர்மதி

அலைபேசி: 8667417874

அனைவருக்கும் வணக்கம்.

சென்ற இதழ் சிறப்பாசிரியர் குடந்தை பரிபூரணன் அவர்களின் சிறப்பிதழ் நல்ல தகவல்களை கொண்டிருந்ததாக பலரும் பாராட்டினர். கடல் கடந்து இதழ் பயணம் செய்தது. நன்றி.

அடுத்த ஏப்ரல் 1 இதழ் கோவைக்கவி புவனா அவர்களின் கைவண்ணத்தில் உருவாகிறது. அவர் அதற்கான பணிகளை தொடர்ந்து செய்துவருகிறார். அவருக்கும் வாழ்த்துக்கள்.

இந்த இதழில் புகைப்படங்களைத் தொட்டால் அவர்களின் வாட்சப் சாட் –க்கு லிங்க் செல்லுமாறு அமைத்துள்ளோம்...

தொடர்ந்து எழுதுங்கள்... தொடர்ந்து வாசியுங்கள்...

நேசமுடன்

வெ.கோபிநாத், ஆசிரியர்



Emergency Helpline No.	
100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
108	Medical Helpline
131	Indian Railway Enquiry
139	Railway Enquiry
1031	Anti Corruption Helpline
1072	Train Accident
1090	Anti Terror Helpline
1910	Blood Bank Information
1947	Aadhar card-UIDAI
1071	Air Accident
1906	LPG Emergency Helpline
1919	Eye Donation Bank
1551	Kisan Call Center
1096	Natural Disaster Control
1098	Child Abuse Hotline



ஏப்ரல் 2026

இன்று ஈ இதழ்

சிறப்பாசிரியர்


கோவைக்கவி புவனா





முத்து ஆனந்த்

வேலூர் | 7010482479









ASOKAN KUPPUSAMY

@konjumkavidhaigal · 1.92K subscribers · 1.7K videos

Asokan kuppusamy konjum kavidhaigal கொஞ்சும் கவிதைகள் ...more

facebook.com/profile.php?id=100010691562784 and 3 more links

Subscribe

படங்களைத் தொடவும்...
வீடியோ பார்க்கவும்...



yazh isaiyal

@yazhisaiyal1234 · 4.25K subscribers · 2.3K videos

My channel is a entertainment channel. ...more

facebook.com/saaikalathirumal

Subscribe

Home Videos Shorts Playlists Posts

For You





இன்று

@Indhrudotin · 4 subscribers · 9 videos

அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் - எழுத்தாளர்களின் சங்கமம். - படைப்புக ...more

Customize channel Manage videos

Videos Shorts Playlists Posts



Mobile stand ad — 6 views

fridge magnet video — 7 views

Kalai kolam — 17 views

Key chain video — 26 views

indhru advertisement — 6 views

Writer Velure Muthu Anand — 12 views



படங்களைத் தொடவும்...
வீடியோ பார்க்கவும்...



-லி .நௌஷாத் கான் -

அந்த எழுத்தாளரை
ஏன் போலீஸ்
அரெஸ்ட் பண்ணி
கொண்டு போறாங்க ?

கடி ஜோக் எழுத சொன்னா
அரசியல் ஜோக் எழுதிட்டாராம்

நம்ம புது தலைவர் ஏன்
பேசிக்கிட்டு இருக்கும் போதே
திடீர்ன்னு பேச்சை
நிப்பாட்டிட்டார் ?

அடிச்ச காத்துல
எழுதி கொடுத்த
ஸ்கிரிப்ட் பறந்து
போய்டுச்சாம் அதான் ...

+1

உன் பையன் சோசியல்
மீடியாவுல பைத்தியக்கார
தனமா செய்யுறானே
அதையெல்லாம் நீ கண்டிக்க
மாட்டியா ?

அட நீ வேறப்பா அவன்
அடுத்த பிக் பாஸ்க்கு
போறதுக்கு
இப்படி பண்ணிக்கிட்டு
திரியுறான் ...

#Follow

என்னங்க காலைலயே
நம்ம மருமகன் உங்க
கையை பிடிச்சுக்கிட்டு
அழுது ,அழுது பேசுனாரே
என்னங்க விஷயம் ?

நம்ம பொண்ணு ஓவரா
கொடுமைப்படுத்துறாளாம்
அதான் ரிட்டர்ன்னிங் ஆபர்
இருக்குதான்னு
கேட்டிட்டு போனார் .

மனைவி: "எனக்கு ரொம்பப்
பயமா இருக்குங்க!"



கணவன்: "ஏன்?"

மனைவி: "தண்ணி பிடிக்கிற
'அண்டாலர்ந்து டிரம் வரை'
எல்லோரும் பெட்ரோல் நிறைச்சு
வச்சிருக்காங்க. அது தெரியாம
இந்த 'ட்ரம்பு' ஏவுகணைய
நம்ம ஊரு பக்கம் திருப்பிட்டா!?"



கோவைக்கவி
புவனா

விளம்பர விபரம்

அன்பார்ந்த வாடிக்கையாளரே...
இன்று ஈ இதழ் கடந்த ஓராண்டாக எந்த விளம்பரமும் இல்லாமல் பல்வேறு வாட்சப் குழுக்கள் வழியாக தமிழகம் முழுவதும் மற்றும் கடல் கடந்தும் 10,000 த்திற்கும் மேற்பட்டவர்களுக்கு செல்கிறது.

இன்று ஈ இதழில் விளம்பரம் செய்தால் www.indhru.in என்ற இணையத்திலும் இலவசமாக விளம்பரம் பதிவேற்றம் செய்யப்படும். உங்களுக்கு இது கூடுதல் நன்மையைத் தரும்...

இந்த குறைந்தகால சலுகையை பெற்று பயனடையுமாறு அன்புடன் அழைக்கிறோம்... இதழ் வேண்டுமா? கீழே உள்ள படத்தைத் தொடவும். இன்று ஈ இதழ் படிக்கலாம்.

ஒரு பக்க விளம்பரம் ரூ.~~10,000~~
சலுகை விலையில் **ரூ.5,000** மட்டுமே/-
(ஒரு இதழுக்கு விளம்பர செலவு ரூ.208/- மட்டுமே)
ஒரு ஆண்டுக்கு 24 இதழ்களில் விளம்பரம் வெளியாகும்.
இத்துடன் ஒரு ஆண்டு முழுவதும் www.indhru.in இணையத்திலும் விளம்பரம் இலவசமாக வெளியாகும்.

அரை பக்க விளம்பரம் ரூ.~~5,000~~
சலுகை விலையில் **ரூ.2,500** மட்டுமே/-
(ஒரு இதழுக்கு விளம்பர செலவு ரூ.104/- மட்டுமே)
ஒரு ஆண்டுக்கு 24 இதழ்களில் விளம்பரம் வெளியாகும்.
இத்துடன் ஒரு ஆண்டு முழுவதும் www.indhru.in இணையத்திலும் விளம்பரம் இலவசமாக வெளியாகும்.

கால் பக்க விளம்பரம் ரூ.~~2,500~~
சலுகை விலையில் **ரூ.1,250** மட்டுமே/-
(ஒரு இதழுக்கு விளம்பர செலவு ரூ.52/- மட்டுமே)
ஒரு ஆண்டுக்கு 24 இதழ்களில் விளம்பரம் வெளியாகும்.

மேலும் விபரங்களுக்கு 7094053241 என்ற எண்ணுக்கு வாட்சப்பில் தொடர்புகொள்ளவும். அல்லது அருகிலுள்ள படத்தைத் தொடவும்

பரிசுப் பொருட்கள்



வருடம் முழுவதும் உங்கள் விளம்பரம்
கண்ணில் பட்டுக்கொண்டே இருக்கும்.
காலண்டர் தருவதை விட இது சிறந்தது...



வாடிக்கையாளர்களுக்கு
பரிசளிக்க
ஏற்றது...









மொய் கவர்கள்
ஒட்டும்
வசதியுடன் உள்ளது

உங்கள்
பெயரில்
செய்யலாம்.

கண்ணில்
பட்டுக்கொண்டே
இருக்கும்
விளம்பரம்...

குறைந்தபட்சம்
பத்து
எண்ணிக்கையில்
செய்யலாம்

இன்று
வெப்சைட்க்கு
க்ளிக் செய்யவும்

கீ செயின் ஹேங்கர் வீடியோ பார்க்க
கீழே உள்ள படத்தை தொடவும்...

இன்று
வாட்சப்-க்கு
க்ளிக் செய்யவும்



எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி



தலைவரே... இதெல்லாம்
கொஞ்சம் ஓவர்தான் ....
எதைச் சொல்றே ?
எம்எல்ஏ ஆனதுமே ஸ்விஸ்
வங்கியில் எப்படி
அக்கௌன்ட்
ஆரம்பிக்கிறதுனு
கேக்கறீங்களே.....



என் மாமியாருக்கு 70 வது
பிறந்தநாள்டி...
கேக்கு வெட்டிட்டாங்களா ?
இல்லைடி....பாக்கு வெட்டி
கொண்டாடினாங்க....

என் மாமியாருக்கு இன்று
பிறந்தநாள்டி...
நீ கலந்துக்கலையாடி ?
நிச்சயமாக கலந்து கொள்வேன்டி...முதல்
எழுத்து இ-னு மாறின உடனே
கலத்துக்குவேன்டி!

என்னடி இது... திடீர்னு
மூக்குப்பொடி போட
ஆரம்பிச்சுட்டே ?
என்னடி பண்றது... நான் புதுசா
வாங்கி போட்டிருக்கிற வைர
மூக்குத்தியை யாருமே
கண்டுக்கலைடி !

ஸ்விஸ் பேங்க் பிராஞ்ச்சை
இங்கே ஆரம்பிச்சாநல்லாயிருக்கும்....
ஏன் தலைவரே...?
நம்மள மாதிரி வட்டம் மாவட்டம்
எல்லாம் கணக்குஆரம்பிக்கலாமே....!



தன் காதலன் மிகவும் வயதானவன் என்று
அடையாளம் கண்டு கொண்டாள் அவள்...
பீச்சில் வாங்கிய கடலையை அவன் தன் வாயில் ஊற
வைத்து அசைபோட்டபோது !



எம்.பி.தினேஷ்.
கோவை - 25

ஒருவர் : நம்ம தலைவர் வீட்டு கல்யாணத்துக்கு போனது தப்பா போச்சா! ஏன்?

அடுத்தவர் : பந்தியில் உட்கார்ந்ததும் விரலில் மை அடையாளம் வைத்த பிறகுதான் சாப்பாடு போட்டாங்க!

எமதூதன் 1: நம்ம எமலோகத்துக்கு தமிழ்நாட்டில் இருந்து வருபவர்கள் என்ன தொந்தரவு செய்கிறார்கள்?

எமதூதன் 2: எமலோகத்தில் டாஸ்மாக் கடை எங்கே இருக்கிறது என்று கேட்டு நச்சரிக்கிறாங்க!




நாஞ்சில்
சு. நாகராஜன்
பறக்கை
செல். 9486387026

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் இரண்டு பெண்கள் பேசிக் கொண்டது

உங்க பையனுக்கு பெண்
பார்த்தீங்களே என்ன ஆச்சு
உங்க பையன் நல்ல உயரமாச்சே


பெண்ணும் கொஞ்சம் உயரம் தான்
ஆனால் ரொம்ப அகலம் என்று
சொல்ல தரகர் மறந்துவிட்டார்



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

செல். 9944284135

பெண்ணின் தந்தையும், அவரது நண்பரும் :
"மாப்பிள்ளை ட்ரிபிள் E னு சொல்லி ஏமாத்திட்டாங்க!"
"அப்படியா!"
"அவங்க ஊரு Erode. அவங்கப்பா பேரு Ekambaram.
பையன் பேரு Eashwar. அதைத்தான்
அப்படி சொன்னோம்னு சொல்லிட்டாங்க "



டீ. என். பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம்

இன்று-வின்
பழைய இதழ்கள்
படிக்க வேண்டுமா?

www.indhru.in

பார்வையிடுங்கள்





ஏ.மூர்த்தி புல்லரம்பாக்கம் 9600886441



மன்னா எதிரி நேருக்கு நேர் சந்திக்கத்
தயாரா என்று கேட்கிறான்

எனக்கு புறமுதுகு காட்டித்தான்
பழக்கம் என்று சொல்லி விடும்





ஏன்டி நீ பண்றது நல்லாயில்ல

என்னடிப் பண்ணுனேன்?

நீ மார்டன் தாயா இருக்கலாம்
அதுக்காக தாலாட்டுப் பாட்ட பாப்
ஸ்டைல்ல பாடறது நல்லாயில்லை

உங்க உடம்பு வீக்கா இருக்கு
மனைவிய சத்தா சமைச்சிப்
போடச் சொல்லுங்க

அதுக்கு வாய்ப்பில்லை
நானேதான் சமைச்சி சாப்பிடனும்
டாக்டர்





மன்னா புலவர் பாடிப் பரிசு
பெற வந்துள்ளார்


பாடினால் மட்டும் போதாது ஆடலும்
வேண்டும் என்று சொல்லிவிடும்
அமைச்சரே

நான் பத்து படத்துக்கு கதை
வசனம் எழுதியிருக்கேன்

எல்லா படமும் ஹிட்டா

அட ஒரு படம் கூட வெளிவரல





டீ.என்.பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம் ✆ 9884808965



தாத்தாவும் பேரனும்:

"என்னடா பேராண்டி, ஒரு சீப்பு இருபது ரூபான்னு தெருவிலே வித்திட்டு போறான். சீப்பு விலை ஒரு ரூபா, ரெண்டு ரூபாதானே இருக்கும்? "

"தாத்தா அது தலை சீவற சீப்பு இல்ல. வாழைப்பழ சீப்பு ! "

திண்ணையில் அமர்ந்திருக்கும் தாத்தாவும், பேரனும்:

"தாத்தா, வயசாயிருச்சுன்னு பீல் பண்ணாதே. மனசுல எப்பவும் நாம இருபது வயசு வாலிபன் தான்னு நினைச்சுக்க"

"சரிடா பேராண்டி, சாயந்திரம் நீ சைட் அடிக்கப் போறப்போ உன்னோட நானும் வரேன், கூட்டிட்டு போ"

(வீட்டுக்குள் பார்த்து) "பாட்டி, இங்க வா. தாத்தா என்னமோ சொல்றாரு பாரு "
















ஏண்டா ... எது எதுக்கு சோதனை ஓட்டம்னு ஒரு லிமிட் இல்லையா :-)



1. அரண்மனைக்கு பக்கத்துல டாஸ்மாக் கடை வந்தது தப்பாப் போச்சு!
என்னாச்சு?
புலவர் இப்பல்லாம் மன்னரைப் புகழ்ந்து இங்கிலிஷ்ல தான் பாடுறார்!

2. மன்னர் பதுங்குக்குழியில் இருக்கும் போது அவருடைய பிறந்தநாள் வந்தது தப்பாப் போச்சு!
என்னாச்சு?
' இன்று போல் என்றும் வாழ்க' ன்னு நாட்டு மக்கள் கோஷம் போடறாங்களே!

3. ஏன் டாக்டர், என்னோட ஆபரேஷனை தள்ளி வச்சுக்கிட்டே போறீங்க?
நான் என்ன செய்யட்டும், மார்ச்சுவரியில இடம் இல்லையே!

4. பிளஸ் டூ ரிசல்ட் என்ன ஆகுமோன்னு பயமா இருக்கு!
யாரு பரீட்சை எழுதியிருக்காங்க சிஸ்டர்?
நம்ம டாக்டர் தான்!

5. புலவர் பாடும்போது மன்னர் ஏன் சிம்மாசனத்தில் இருந்து எழுந்து போகிறார்?
மன்னருக்கு தூக்கத்துல நடக்கிற வியாதி இருக்கே!

சி. ஆர். ஹரிஹரன்,
ஆலுவா, கேரளா.





~ கோல்டு எதுவும் வாங்குனியா மாப்ள..

மேரி கோல்டுக்கே வழி இல்லாம வெறும் டீயை குடிச்சிட்டு இருக்கேன்..
போயா பேசாம..











5 லட்ச ரூபாய் கடன் இருக்குன்னு விஷசத்த வங்கி குடிச்சிட்டேன் ...😩😣

~ ஐய்யயோ அப்பறம் என்னாச்சு 😳😮

10 லட்ச ரூபாய் கடன் வாங்கி என்னைய காப்பாத்திட்டாங்க , இப்போ 15 லட்ச ரூபாய் கடன் இருக்கு 😭



ஆறு வருசமா வேலைக்கு போறியே என்ன சேர்த்து வச்சிருக்க... 😏

BP 170
சுகர் 220..






அச்சமில்லை ஓடு ஓடு சொன்னேன்


எதிர்த்த வீட்டு பையன கூட்டிக்கிட்டு ஓடிட்டா சார்"







இன்முகத்தான் சிந்தனை

ஒரே அவமானப்போச்சி என்றான் என் நண்பன்...

என்னா? என்று கேட்டேன்...

சொன்னா நீ கழுவி கழுவி ஊத்துவ என்றான்.

சொல்லுடா... நண்பர்களுக்குள்ள என்னா இருக்கு என்று நைசாக அவன் சொல்ல வந்ததை கேட்டுவிட முயற்சித்தேன்...

போனவாரம் ஒரு சம்பவம் நடந்துருச்சி என்றான்... ஒரு செல்லாத அம்பது ரூபா நோட்ட மாத்த முயற்சி செஞ்சேன்...



பெட்ரோல் பங்க்-ல குடுத்தியா என்றேன்...

இல்ல என்றான்..

வேற எங்க என்றேன்...

மளிகை கடைல நைட் ஒன்பது மணிக்கு மேல அந்த பெரியவர் கடைல ரெண்டு தேங்கா வாங்குனேன்... நைசா இந்த நோட்ட மாத்திவிட்டேன்...

அது என்ன கள்ள நோட்டா என்றேன்...

இல்ல... கிழிஞ்சி டேப் ஒட்டுனது... கொஞ்சம் நஞ்ச மாதிரியிருக்கும்... என்றான்....

சரி அப்புறம் என்னாச்சி...?

வீட்ல வந்து தேங்காய உடைச்சா ரெண்டும் கெட்டுப்போயிருந்திச்சி.... வாங்கி ரெண்டு நாளானாதுனால் கடைல கொண்டு போய் மாத்த முடியல... பணத்துக்கு பணம் போச்சி.... பாடமும் கிடைச்சிருச்சி... என்றான்...

இதுதான் கர்மா.... பணத்த கொண்டு போயி பேங்க்-லயே மாத்தலாம்... நீ அவர ஏமாத்த நினைச்ச... இயற்கை உன்ன ஏமாத்திடுச்சி என்று சொல்லிவிட்டேன்....

நினைக்க நினைக்க சிரிப்பு தான் வருகிறது...

இன்முகத்தான்





கோவைக்கவி புவனாவின்

நானும் எனது நட்பூக்களும்!


பரந்து விரிந்த வானம் போல எனது நட்பூக்களும்–
அவர்களை ஒவ்வொருவராக அறிமுகம் செய்யவே நானும் இங்கே விரும்புகிறேன்! முதலாவதாக காலை நான் கண் விழித்ததும் வணக்கத்தோடு வாழ்த்துகளையும் பகிரும்–எனது ரோஜாப் பூச்செடிகளும் செழிப்புடனே பூக்களையும் காய்களையும் கனிகளையும் எனக்குப் பரிசாக அளிக்கும் எனது உற்ற தோழிகளான வெண்டைக்கா முருங்கக்கா அவரைக்கா கத்திரிக்கா கொய்யாக்கா மாங்கா போன்றவற்றையும் கண்குளிரக் கண்டே எனது மனம் குளிரும் இவர்களுடன் நானும் இருக்கிறேன்!

என்னோடு உரையாடு காதல் கவி பாடு என்றே எனது காதல் கிளிகளும் குயில்களும் மயில்களும் என்னை அதிகாலை எழுப்பி விடும்! எங்கள் வீட்டு சேவலும் முட்டையோடு குஞ்சுகளை அடைகாக்கும் கோழிகளும் கூண்டுகளில் தத்தித் தாவும் வெண்ணிற முயல்களும் வண்ண வண்ணப் புறாக்களும் இவற்றின் உணவுகளைப் பகிர்ந்து உண்ண வரும் சித்தெறும்புகளும் காகங்களும் குருவிகளும் பூக்களில் தேன் அருந்த வரும் வண்ணத்துப்பூச்சிகளும் நன்றியோடு எங்களையும் எங்களது வீட்டையும் காவல் காக்கும் எனது செல்ல நாய்க்குட்டி இளமாறனும்–எனது துன்பத்தைப் பனித்துளி போல் விலக்கும்.

சூரியத்தேவனும் வானத்து மதகுகளைத் திறந்து பன்னீர் தூவி எனது உடலோடு உறவாடும் மழை பாங்கியும் என் தீராக் கவலைகளைத் தன்னகத்தே எடுத்துக் கொண்டு மகிழ்வையே நல்கும்– என் பிரியசகியான மாலை நேரக் காற்றும் எனது இன்பதுன்பத்தையும் மௌனத்தோடும் இன்முகத்தோடும் கேட்டு அதற்கான தீர்வுகளைப் பகிரும் எனது ஒரே உற்றத் தோழனான எனது அழகிய பூரணச்சந்திரனுமே

சத்தியம் உரைக்கிறேன் இவர்களே
எனக்குக் கிடைத்த உன்னதமான உயர்வான எனது நட்பூக்கள்!

அடுத்த இதழில் முழுமையாக படியுங்கள்....



அடுத்த இதழ்
கோவை கவி புவனா
சிறப்பிதழ்....

Atossa Academy
Classy wirting for classy kids

Atossa Academy

From Fingers to Fast Mental Maths

Abacus

Speed Up Your Calculations

Vedic Maths

Classy Writing for Classy Kids

Cursive Handwriting

Build Your Future with Better English

Basic English Grammar

Online & Offline Classes

@ Velachery - AGS Colony

Offline Classes On : MONDAY - WEDNESDAY - FRIDAY
Timings : @ 6.30 p.m to 7.30 p.m.

Online Classes On : SATURDAY & SUNDAY
Timings : @ 6.00 p.m to 7.00 p.m.

"Special attention is given to every individual Students"

Ms. S. Aswini M.A., B.Ed.,

Call : 99622 01523



கயத்தை சத்யா
8220836122

1.
ஆசிரியர் " கண்ணுக்குத் தெரியாத பொருட்கள் இரண்டு சொல்லு!'

மாணவன் " காற்று, இரு சக்கர வாகனத்தில் இடியாப்பம் விற்பவர்!"

2.
" தலைவருக்கு வாயில எப்படி ஆணி கிழிச்சுது!?"

" தலைவர் மரங்கள் மாநாடு நடத்த மரத்தை கட்டிப்பிடிச்சு முத்தம் கொடுக்கிறாப்ல போட்டோ ஷூட் நடத்துறப்போ... விளம்பர போர்டு அடிச்சிருந்த ஆணியை கவனிக்காமல் முத்தம் கொடுத்துடுட்டாரு!"

3.
" கோவிலுக்கு போறேன்னு சொல்லிட்டு ... அந்த அமைச்சரை போய் சந்திச்சுட்டு வந்து இருக்கீங்களே!?"

" கோயில்ல இருந்த ஒரிஜினல் சாமி சிலையை எடுத்து அங்கேதான் வச்சிருக்காங்க!"

4.
" ரோட் ஷோவை தலைவர் செலவே இல்லாம நடத்திட்டாரா.. எப்படி!?"
" அந்தந்த ஏரியாவுல ரோடு போடுற ரோடு ரோலர் மேலே ஏறி நின்னுதான்!"

5.
" ஷோரூம்ல இருந்து புதுசா எடுத்த கார் உடனே கவுந்துட்டா...எப்படி!?
" கார் வீலுக்கு அடியில வைக்க எலுமிச்சம்பழம் உடனே கிடைக்கலைன்னு, முழு தேங்காயை வைத்து எடுத்தோம்!"

டாக்டர்! எனக்கு வந்த நோயைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?

புது மாடல் கார் வாங்க எனக்கு யோகம் வந்தாச்சுன்னு தான்!

சி. ஆர். ஹரிஹரன்,
ஆலுவா, கேரளா









கதைகளில், கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல.
படைப்புகள் கொடுத்த வலைதளங்களுக்கு நன்றி.
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241

